# பொதுக்காலம் 25ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே! பொதுக் காலத்தின் 25ஆம் ஞாயிறு திருப்பலியில் பங்கேற்க வந்திருக்கும். அனைவரையும் பெருமகிழ்வுடன் வரவேற்கிறோம்.

இன்றைய வாசகங்களில் ஏழைகளையும் வறியவர்களையும் நசுக்கி ஒடுக்காமல் அவர்களைக் கை தூக்கிவிட இறைவன் நம்மை அழைக்கின்றார். நிரந்தரமற்ற இவ்வுலகில் நம்மிடம் உள்ள பொருட்செல்வங்களை மட்டுமல்ல. நமது திறமைகளையும் நாம் மற்றவர்களின் வாழ்க்கைத்தரம் உயர பயன்படுத்துகிறோமா என சிந்திக்க வேண்டும். எவரும் இரு தலைவர்களுக்குப் பணி செய்ய முடியாது. நமது இலக்கு என்ன? பணமா அல்லது இறைவனா?

நமது வாழ்க்கைக்கு பணம் தேவைதான். ஆனால் பணத்தின் மீது மோகம் கொண்டு அதை மட்டுமே தேடி அலையும் போது இறைவனையும் இறைவன் அளிக்கும் நிலைவாழ்வையும் இழந்து விடுகிறோம். அன்பு, இரக்கம், பரிவு, மன்னிப்பு போன்ற கிறிஸ்துவின் மதிப்பீடுகளை பின்பற்றி வாழும் போது நமது உள்ளம் இறைவன் வாழும் இல்லமாக மாற்றம் பெறும்.

இயேசு தம் சீடர்களை அனுப்பும் போது பாம்புகளைப் போல் முன்மதி உடையவர்களாகவும் புறாக்களைப் போல் கபடற்றவராயும் இருங்கள் என்று கூறுகிறார். முன்மதி என்பது காலம், இடம், சூழ்நிலைகளை அறிந்து உணர்ந்து நாம் செய்கின்ற செயல்களையும் அவற்றின் விளைவுகளையும் சீர்தூக்கிப் பார்ப்பது. நாம் சுதந்திரமாக செயல்படுவதற்கான சக்தியை நமக்கு அளித்து, நாம் கடவுளுடைய விருப்பத்திற்கேற்ப முன்மதியுடன் செயல்பட இறைவன் நம்மை அழைக்கின்றார். நாமும் முன்மதியோடு செயல்பட்டு நிலை வாழ்வைப் பெற்றுக் கொள்ளும் அருள் வேண்டி இப்பலியினில் இணைவோம். இறையாசீர் பெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை: ஆமோஸ் 8: 4-7

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மக்களிடையே சீர்கேட்டினைப் பற்றித் தெளிவாக எடுத்துக் கூறுகிறார் இறைவாக்கினர் ஆமோஸ். ஏழை எளிய மக்களை வாட்டி வதைத்து, ஏமாற்றி அவர்களைக் கொள்ளையடிக்கக் கள்ளத் தராசினை பயன்படுத்தும் வலியவர்களை சாடுகின்றார் இத்தகைய மனப்பாங்கு உள்ளவர்களுக்குக் கடவுளின் கோபத்தை எடுத்துரைக்கும் முதல் வாசகத்திற்கு செவிமெடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை: 1 திமொத்தேயு 2: 1-8

திருத்தூதர் பவுல் அனைவருக்காகவும் இறைவனிடம் பரிந்து பேசி மன்றாட, நன்றி கூற அன்புடன் அழைக்கிறார். இதுவே நம் மீட்பராகிய இயேசுகிறிஸ்துவின் முன் சிறந்ததும் ஏற்புடையதும் ஆகும். திருத்தூதராகவும் நற்செய்தியை அறிவிப்பவராகவும் பிற இனத்தாருக்குக் கற்பிக்கும் போதகராகவும் ஏற்படுத்தப்பட்டப் பவுலடியார் கைகளை உயர்த்தி இறைவேண்டல் செய்ய அழைக்கும் வாசகத்திற்குக் கவனமுடன் செவிமெடுப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. எளியோரை அன்பு செய்யும் இறைவா!

திரு அவையை வழிநடத்தும் எம் திருத்தந்தையை ஆசீர்வதியும். அவருக்கு உடல், ஆன்ம நலம் தந்து, தமது மந்தையை வழிநடத்தும் ஆற்றல் தந்து வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நீதியின் சுடரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்கள் அனைவரும் வறியவர்களை நசுக்காமலும் ஏழை, எளிய மக்களின் நல்வாழ்வுக்கு வழிவகுக்கும் நல்ல பல திட்டங்களை மேற்கொண்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நல்ல தொண்டுள்ளம் கொண்டவர்களாகத் திகழ்ந்திட வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை. மன்றாடுகிறோம்.

3. எங்கள் மீட்பராகிய இறைவா!

எத்தகைய துன்பத்திலும் உம்மை நோக்கிக் கூவி அழைப்பவர்களுக்கு செவிசாய்ப்பவர் நீரே என்ற நம்பிக்கையுடன் உம் திருமுன் வந்துள்ளோம். அன்பு செய்வதே மேலான நீர் விரும்பும் கட்டளை என்பதை நாங்கள் உணர்ந்து உம்மோடும் எம் அயலாரோடும் அன்பு கொண்டு வாழ வரம் தர இறைவா உம்மை வேண்டுமென்று மன்றாடுகின்றோம்.

4. ஒளியாம் எம் இறைவா!

சமூகத்தில் நிலவும் அவலங்களை எதிர்த்து அமைதிக்காகவும் மக்களின் நல்வாழ்விற்காகவும் போராடி வரும் நல் உள்ளங்களுக்காக உம்மை மன்றாடுகிறோம். அவர்களின் சமூக அக்கறை மிக்க தொண்டுகளில் வெற்றியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. நலன்களின் நாயகரே எம் இறைவா!

பொன் விழா ஆண்டில் இருக்கும் எம் மறைமாவட்டத்திற்காக நன்றி கூறுகிறோம். இந்த ஆண்டில் எம் ஆயர், அருட்தந்தையர்கள், கன்னியர், துறவிகள், பொதுநிலையினர் அனைவரும் மேற்கொள்ளும் அனைத்து செயல்களிலும் நீர் உடனிருந்து ஆசீர்வதித்து வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி : ஆசிரியை திருமதி. ஞா.சொஸ்தினா மேரி, மேலமெஞ்ஞானபுரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com